www.Padasalai.Net www.CBSEtips.in

# காலாண்டுத் தேர்வு - 2023

**12 - STD** **பொதுத்தமிழ்** பதிவு எண்.

நேரம்: 3.00 மதிப்பெண்கள்: 90

**I. பலவுள் தெரிக :** (14x1=14)

1) பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென தடித்த சொல்லின இலக்கணக்குறிப்பு
அ) வினைத்தொகை ஆ) உரிச்சொல் தொடர் இ) இடைச்சொல் தொடர்
ஈ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

2) நடுவணரசு _______ ஆண்டு பேரிடர் மேலாண்மை ஆணையத்தை அமைத்தது.
அ) 2010 டிசம்பர் 15 ஆ) 2005 டிசம்பர் 23 இ) 2005 டிசம்பர் 12 ஈ) 2015 டிசம்பர் 25

3) படிமம் என்பதன் பொருள்
அ) சொல் ஆ) செயல் இ) காட்சி ஈ) ஒளி

4) கூற்று : இந்தியாவின் பல பகுதிகளில் இருந்தும் நெசவாளர்கள் சென்னை நோக்கி வந்தனர்.
காரணம் : கிழக்கிந்திய நிறுவனத்தின் வணிகம், துணி சார்ந்ததாகவே இருந்தது.
அ) கூற்று சரி, காரணம் தவறு ஆ) கூற்று தவறு, காரணம் சரி
இ) கூற்று தவறு, காரணம் தவறு ஈ) கூற்று சரி, காரணம் சரி

5) கடலின் பெரியது
அ) உற்ற காலத்தில் செய்த உதவி ஆ) பயன் ஆராயாமல் ஒருவர் செய்த உதவி
இ) தினையளவு செய்த உதவி ஈ) இவையனைத்தும்

6) பங்காருசாமி என்ற கதைமாந்தர் இடம்பெற்றுள்ள சிறுகதை
அ.யாப்பருங்கலக்காரிகை ஆ. தண்டியலங்காரம் இ. தொல்காப்பியம் ஈ. நன்னூல்

7) இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கண நூல்
அ) முதல்கல் ஆ) பெருட்டமழைக்காலம் இ) உரிமைத்தாகம் ஈ) தலைக்குளம்

8) "உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே
அஃறிணை என்மனார் அவரல பிறவே" இந்நூற்பா இடம்பெற்ற இலக்கண நூல்
அ) நன்னூல் ஆ) அகத்தியம் இ) தொல்காப்பியம் ஈ) இலக்கண விளக்கம்

9) தோப்பில் முகமதுமீரான் எழுதிய சாகித்திய அகாதெமி விருதுபெற்ற புதினம்.
அ) துறைமுகம் ஆ) கூனன்தோப்பு இ) சாய்வு நாற்காலி ஈ) ஒரு குட்டித்தீவின் வரைபடம்

10) 'உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசுவார்" இத்தொடர் உணர்த்தும்பண்பு
அ) நேர்மறைப் பண்பு ஆ) எதிர்மறைப் பண்பு இ) முரண் பண்பு ஈ) இவை அனைத்தும்

11) யார் ? எது ? ஆகிய வினாச்சொற்கள் பயனிலை அமைந்து உணர்த்தும் திணைகள் முறையே...
அ) அஃறிணை, உயர்திணை ஆ) உயர்திணை, அஃறிணை
இ) விரவுத்திணை, அஃறிணை ஈ) விரவுத்திணை, உயர்திணை

12) உவமைக்கவிஞர் என்று சிறப்பிக்கப்படுபவர்
அ) சுரதா ஆ) வெ.ராமலிங்கனார் இ) அப்துல் ரகுமான் ஈ) மு.மேத்தா

13) வெண்பாவின் ஓசை
அ) அகவலோசை ஆ) செப்பலோசை இ) துள்ளலோசை ஈ) தூங்கலோசை

14) நரம்புகளுக்குள் வீணை மீட்டிக் கொண்டிருக்கிறது என்று அய்யப்ப மாதவன் குறிப்பிடுவது.
அ) சூரிய ஒளிக்கதிர் ஆ) மழை மேகங்கள் இ) மழைத் துளிகள் ஈ) நீர்நிலைகள்

**II. அ. கீழ்வரும் வினாக்களுக்கு எவையேனும் மூன்றனுக்கு விடையளிக்கவும் .** 3x2=6

15) கவிஞர் சிற்பி எவற்றை வியந்துபாட தமிழின் துணை வேண்டுமென்கிறார்

16) நிலையாமை குறித்து சவரி உரைக்கும் கருத்து யாது?

17) கலிவிழா, ஒலிவிழா -விளக்கம் தருக.

18) எதிர்பாராத நிகழ்வுகளை ஜலாலுத்தீன் ரூமி எவ்வாறு உருவகப்படுத்துகிறார் ?

**ஆ. கீழ்வரும் குறுவினா எவையேனும் இரண்டனுக்கு விடையளிக்கவும்** 2x2=4

19) நடையழகியல் பற்றி தொல்காப்பியம் கூறும் கருத்தைக் குறிப்பிடுக

20) "புக்கில், தன்மனை"—சிறுகுறிப்பு எழுதுக

21) அக்காலத்துக் கல்வி முறையில் 'மனனப் பயிற்சிக்கு உதவிய நூல்கள் எவை?

**III. எவையேனும் ஏழனுக்கு விடைதருக**

22) வல்லின மெய்யை இட்டும் நீக்கியும் எழுதுக 7x2=14
நம் வாழ்க்கையின் தரம் நமது கவனத்தின் தரத்தை பொறுத்திருக்கிறது. புத்தகம் படிக்கும் பொழுது கூர்ந்தக் கவனம் அறிவை பெறுவதற்கும் அடிப்படை தேவையாகும்.

23) மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக : அலை, அளை, அழை

24) தொடரிலுள்ள பிழைகளை நீக்கி எழுதுக
அ) அப்பசி அட்டமையில் ஊருனி நிறைந்தது
ஆ) மானம் பார்த்த பூமியில் பயிறு வகைகள் பயிரிடப்படுகின்றன.

25) ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் பகுபத உறுப்பிலக்கணம் தருக : அ) பொலிந்தான் ஆ) கலங்கி

26) கலைச் சொற்களுக்கேற்ற தமிழ்ச்சொல் எழுதுக
அ) Fiction ஆ) conviction

27) பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக
அ) புள்ளைக்கு உடம்பு சரியில்லை மூணு நாளா சிரமப்படுது. ஆ) 'வூட்டாண்ட வெளையாண்ட கொயந்தையை அப்பா எங்க இஸ்துகினு போனாரு.



CamScanner
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

28) ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக ஆ) பூம்பாவாய் அ) அருங்கானம்
29) ஏதேனும் ஒன்றிற்கு சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க அ) தாமரை ஆ) வெங்காயம்
30) திருவளர்ச்செல்வன்.திருவளர் செல்வன் - இவற்றில் சரியான தொடர் எது? அதற்கான இலக்கண விதி யாது?

IV. அ) எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடைதருக 2x4=8

31) "வருபவர் எவராயினும்
நன்றி செலுத்து"- இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.
32) "மூன்றான காலம் போல் ஒன்று" - எவை? ஏன்? விளக்குக..
33) எவற்றையெல்லாம் விட நன்றி உயர்ந்தது? - குறள் வழி விளக்குக.
34) இராமலிங்க அடிகள் கந்தவேளிடம் எத்தகையோர் உறவு வேண்டுமெனக் கேட்கிறார்?

ஆ) எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடைதருக 2x4=8

35) சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில், இன்றும் நிலைத்திருப்பனவற்றைக் குறிப்பிடுக.
36) பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே இன்றைய கூட்டுக் குடும்பம் - விளக்கம்எழுதுக.
37) நீவிர் ஆசிரியரானால் மாணாக்கரை அன்பினால் எவ்வகையில் நெறிப்படுத்துவீர்?
38) மணலில் எழுதியது முதல் தற்காலம் வரை எழுதும் முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைத் தொகுத்துரைக்க.

V. எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடைதருக 3x4=12

39) பொருள் வேற்றுமை அணியை விவரி (அல்லது)
சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்
ஏமப் புணையைச் சுடும்" - இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக

40) 1.தமிழாக்கம் தருக
அ) A new language is a new life
ஆ) Knowledge of language is the doorway to wisdom
இ) The limits of my language are the limits of my world
ஈ) Learning is a treasure that will follow its owner everywhere
2. காதுகேளாதோர்க்கான மாற்று வினா.
1. கீழ்க்காணும் பத்தியைப் படித்து ஐந்து வினாக்களை உருவாக்குக :
மொழி என்பது மக்கள் படைத்துக் காக்கும் அரியதொரு கலை. மொழியே மக்களின் அறிவை வளர்த்து உயர்த்தும் அரிய கருவியாகவும் உள்ளது. பெற்ற தாயின் முதல் வேட்கை தன் குழந்தையுடன் பேசுதல், அவள் முதலில் அடையும் பெரிய மகிழ்ச்சி, குழந்தையின் பேச்சைக் கேட்பதே ஆகும். குழந்தையின் மனவளர்ச்சியோடு தொடர்புடையது மொழி வளர்ச்சியே ஆகும். மனம் என்பது பெரும்பாலும் மொழியால் வளர்ந்து அமைந்தது. மனத்தின் வளர்ச்சிக்கு ஏற்பவே பேசுவோரின் மொழியும் வளர்ச்சி பெற்று நிற்கும் மக்கள் அனைவரும் மொழிக்கு ஆசிரியராகவும் உள்ளனர் ; மாணவராகவும் உள்ளனர். மொழியை வளர்ப்பவரும் மக்களே : மொழியால் வளர்பவரும் மக்களே. மொழி வரலாறு (மு. வரதராசனார்)
வினாக்கள்:
1. மக்கள் படைத்துக் காத்துவரும் அரிய கலை எது ? அது ஆற்றும் செயல் யாது ?
2. தாயின் முதல் விருப்பம் என்ன ? 3. மொழி வளர்ச்சி எதனோடு தொடர்புடையது ?
4. மொழியை வளர்ப்பவரும், வளர்பவரும் யார் ?

41) பா நயம் பாராட்டுக: மையக்கருத்தை எழுதி எவையேனும் மூன்று நயங்களை எழுதுக
"பெற்றெடுத்த தமிழ்த்தாயைப் பின்னால் தள்ளிப்
பிறமொழிக்குச் சிறப்பளித்த பிழையை நீக்க
உற்றெடுத்தே அன்புரையால் உலுங்க வைத்திவ்
உலகத்தில் தமிழ்மொழிக்கு நிகரும் உண்டோ?
கற்றுணர்ந்தே அதன் இனிமை காண்பாய் என்று
கம்பனொடு வள்ளுவனைச் சுட்டிக் காட்டித்
தெற்றெனநம் அகக்கண்ணைத் திறந்து விட்ட
தெய்வக்கவி பாரதி ஓர் ஆசான் திண்ணம்" - நாமக்கல் கவிஞர்

42) 'தினை விதைத்தவன் தினை அறுப்பான்' (அல்லது) 'யானைக்கும் அடிசறுக்கும்'- என்னும் பழமொழியினை நும் வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.

VI. அனைத்து வினாக்களுக்கும் விடையளி 3x6=18

43) அ) கவிதை எழுத அறிய வேண்டுவனவாக சுரதா கூறுவனவற்றை விளக்குக.(அல்லது )
ஆ) நெடுநல்வாடையில் நக்கீரர் காட்டும் மழைக்கால வருணனையைச் சொல்லில் வடிக்க.
44) அ) குடும்பம் என்னும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது - எவ்வாறு? விளக்குக. (அல்லது)
ஆ) பண்டையக் காலக் கல்விமுறையில் ஆசிரியர் மாணவர்களிடையே நிகழ்ந்த கற்றல்,கற்பித்தல் முறைகளைத் தொகுத்து எழுதுக
45) அ) பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்து கொண்ட மொழிப்பற்று, சமுகப்பற்று ஆகியவற்றை விவரிக்க. (அல்லது)
ஆ)'சாலை விபத்தில்லா தமிழ்நாடு" இக்கூற்று நனவாக நாம் செய்ய வேண்டுவன யாவை?

VII. மனப்பாடப்பகுதி 4+2=6

46) அ) "ஒருமையுடன்" எனத் தொடங்கும் தெய்வமணிமாலை பாடலை அடிபிறழாமல் எழுதுக.
ஆ) 'வரும்' என முடியும் திருக்குறளை எழுதுக.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com
CamScanner